DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC –217/2019

Prosecution witness – PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.காமராஜ் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

Accused absent.

20.01.2026 – 04.05 PM

முதல் விசாரணை:–

1. நான் சாயல்குடியில் குடியிருந்து ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஐத் தெரியாது. எனக்கு எதிரியைத் தெரியாது.

2. எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையில் பேரில் இன்று ஆஜரானேன்.

பிறழ் சாட்சி:–

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –

கடந்த 24.08.2014 ந் தேதி மாலை 05.00 மணிக்கு எனது ஆட்டோவில் கடுகுசந்தை சத்திரத்திற்கு சவாரி சென்றுவிட்டு சாயல்குடி நோக்கி வந்த போது மலட்டாறு அருகே ஈ.சி.ஆர் ரோட்டில் TN 69 AU 8894 என்ற பதிவெண் கொண்ட Maruthi Suzuki காரில் ஓட்டுநரை TN 02 2311 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவின் ஓட்டுநரான வழக்கின் எதிரி அசிங்கமான வார்த்தைகளால் பேசி கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் அடித்து கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததை நான் நேரில் பார்த்ததாகவும் தற்போது எதிரி ஆட்டோ ஓட்டுநர் என்பதால் அவருடன் சமாதானம் சென்றுவிட்டபடியால் எதிரியை காப்பாற்ற வேண்டும் என சொல்லிவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி